நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

www.dhinatamil.com · மாற்றத்தின் ஆரம்பம் · dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 14.02.2026 . மலர் 04 . இதழ் 44. சனிக்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 14.02.2026 . VOL 04 . ISSUE 44. SATURDAY . 4 PAGES . Rs. 5

## உரிமைத்தொகையாக வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டது

# மகளிருக்கு ரூ.5 ஆயிரம்!

## இன்ப அதிர்ச்சி கொடுத்த முதல்வர் ஸ்டாலின்!!

சென்னை, பிப்.14-

மகளிர் உரிமைத் தொகையாக ரூ.5,000 வரவு வைக்கப்பட்டுள்ளதாக காலைப் பொழுதில் தமிழக பெண்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின். மகளிர் உரிமைத் தொகையாக 5,000 ரூபாயை விடுவித்துப் பேசிய முதல்வர் ஸ்டாலின், “ அதிமுக பாஜக கூட்டணி தேர்தலை காரணம் காட்டி மகளிர் உரிமைத் தொகையை நிறுத்துவதற்கான சூழ்ச்சி செய்கிறது. அடுத்து அமைய உள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில் மகளிர் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்’ என அடுத்தடுத்த பரபரப்புகளையும் அவர் பற்றவைத்தார்.

சட்டப்பேரவை தேர்தல் நேரத்தில் பெண்களின் வங்கிக் கணக்குகளில் பணம் வரவு வைக்கப்படுவது தற்போது அரசியல் வியூகமாகிவிட்டது. பெண்களுக்கு ரூ.1000 உதவித் தொகை என திமுக அளித்த தேர்தல் வாக்குறுதி அக்கட்சி 2021ல் ஆட்சியை பிடிக்க அடித்தளமிட்டது. அதுபோல கர்நாடகா மற்றும் தெலங்கானாவில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை பிடிக்கவும் பெண்களுக்கு உதவித் தொகை திட்டங்கள் முக்கிய காரணமானது.

டெல்லி சட்டப்பேரவைத் தேர்தலிலும் பெண்கள் உதவித் தொகை ரூ.2,500 வழங்கப்படும் என அறிவித்து ஆம் ஆத்மியிடமிருந்து ஆட்சியை கைப்பற்றியது பாஜக. அதுபோலவே சத்தீஸ்கரில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை கைப்பற்றும் சூழல் இருந்தபோது, பெண்களுக்கான உதவித் தொகையை அறிவித்து அரசை தக்கவைத்தது பாஜக. இதுமட்டுமின்றி, ஆட்சியில் இருக்கும்போதே பெண்கள் உதவித் தொகை அறிவிப்பை வெளியிட்டு அரசை தக்கவைத்துக் கொண்ட மாநிலங்களும் உண்டு. மத்தியப் பிரதேசத்தில், காங்கிரஸ் நல்ல செல்வாக்கை பெற்று முன்னேறிய நிலையில், பாஜக முதல்வராக இருந்த சிவராஜ் சிங் சவுகான் பெண்களுக்கான உதவித் தொகையை உடனடியாக விடுவித்து 2023 ஆட்சியை தக்கவைக்க உதவினார். அதேபோல மகாராஷ்டிராவிலும் பெண்கள் உதவித் தொகைதான் 2024 மீண்டும் பாஜக கூட்டணி ஆட்சியமைய காரணமானது.

# பரிதாபத்தில் பன்னீர் : ஜொலிக்குமா மூவர் அணி?



## தேர்தல் நிலவரத்தை விவரிக்கிறார் மூத்த பத்திரிகையாளரும், அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனருமான முத்துக்குமார்

நாகர்கோவில் பிப்ரவரி 14-

அரசியல் களத்தில் முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வத்தின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்கு உரியதாக உள்ளது. ஜெயலலிதாவுக்கு நம்பிக்கைக்கு உரியவராக இருந்து மூன்று முறை முதலமைச்சர், கட்சியின் பொருளாளர் பதவியை தட்டி சென்றவர் ஓ. பன்னீர் செல்வம்.

அதிமுகவில் அனுமதி இல்லை என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்தப் பிறகும், என்டிஏ கூட்டணியில் இருந்து அழைப்பு வரும் என்று ஓபிஎஸ் இன்னமும் காத்துக் கொண்டிருக்கிறார். தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்லி வந்த பன்னீர் செல்வம் இப்போது மௌனம் ஆகிவிட்டார். அடுத்த கட்டமாக என்ன செய்வது என்று தன்னுடன் இருக்கிற ஆதரவாளர்களுடன் பலமாக கலந்தாலோசித்து கொண்டிருக்கிறாராம்.

முதலில் வருகிற சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவாரா என்பதே சந்தேகம் தான். என்டிஏ கூட்டணி கிடைத்தால் மட்டுமே ஓபிஎஸ் போட்டியிட வாய்ப்பு உள்ளதாக அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது. அப்படி என்டிஏ கூட்டணி கிடைக்காவிட்டால் தனது மகனை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வைப்பார் என்கிற பேச்சும் பரவி கொண்டிருக்கிறது.

இந்நிலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியினர் அழைத்து சேர்த்து கொண்டாலும், தனிமையில் ஓபிஎஸ் செல்ல முடியாது. சசிகலாவையும் அழைத்து செல்ல வேண்டும். அதற்கு ஒரு கட்சி வேண்டுமே என்று எண்ணுகிறார். பண்ருட்டி ராமசந்திரனிடம் கட்சி ஒன்று உள்ளதாம். அதை பயன்படுத்தலாம் என்றால், பண்ருட்டியாரோ தவெக பக்கம் தலைகாட்ட நினைக்கிறாராம். எனவே ஓபிஎஸ் மேலும் பரிதாபத்திற்குரிய மனிதராகவே காணப்படுகிறார்.

எனவே வேறுவழியில்லை என்பதால், சசிகலாவுடன் கைகோர்த்து, தென்மாவட்டங்களில் தனது ஆதரவாளர்களுக்கு போட்டியிட வாய்ப்பு கொடுத்து, அதிமுகவுக்கு எதிராக பிரச்சாரத்தில் ஈடுபடலாம் என்கிற நிலைப்பாட்டில் இருப்பதாக செய்திகள் உலா வருகின்றன. இதற்கு திமுகவின் மறைமுக ஆதரவும் கிடைக்கும் எனவும் ஓபிஎஸ் நம்புகிறார்.

இதற்கிடையில் தனிமையில் விடப்பட்ட ராமதாஸையும் தன்னோடு இணைத்துக் கொள்ளலாம் என்கிற கணக்கிலும் இருந்து கொண்டிருக்கிறாராம் ஓபிஎஸ். அன்புமணி நிறுத்தும் பாமக வேட்பாளர்களுக்கு எதிராக ராமதாஸ் தனது ஆதரவு வேட்பாளர்களை நிறுத்தினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை என்று சொல்லுகிறார்கள் அரசியல் கருத்தாளர்கள்.அதிமுகவை வீழ்த்த இதுவே சரியான முடிவாக இருக்கும் என்றும் ஓபிஎஸ் நம்புகிறார். ஆக கடைசி நேரத்தில் என்டிஏ கூட்டணி கைவிடும் பட்சத்தில் ஓபிஎஸ், சசிகலா, ராமதாஸ் என்று மூவர் அணி அமைத்து தேர்தலில் போட்டியிட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. எதுவாயினும் ஜெயலலிதா பிறந்தநாளில் தனது முடிவை அறிவிக்கலாம் என்கிற நிலையில் ஓபிஎஸ் இருப்பதாக தெரிகிறது.



## சங்கரன்கோவிலில் திமுக மதச்சார்பற்ற கூட்டணி சார்பில்

# ஒன்றிய அரசின் முட்டை பட்ஜெட்டை கண்டித்து அவித்த முட்டையுடன் வந்து நூதன போராட்டம்

## ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



சங்கரன்கோவில், பிப்.14-

சங்கரன் கோவிலில் தலைமை தபால் நிலையம் முன்பு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஒன்றிய பாஜக அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காததை சுட்டிக்காட்டும் வகையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு ஒன்றிய அரசின் பட்ஜெட் டில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் வகையில் நிதி ஒதுக்காததை கண்டிக்கும் வகையில் மதச்சார்பற்ற கூட்டணியுடன் இணைந்து அவித்த முட்டையுடன் வந்து ஒன்றிய அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பி நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர் ஆர்ப்பாட்டத்தில் நகர செயலாளர் பிரகாஷ் நகராட்சி சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் முத்துராஜ் தொகுதி செயலாளர் பீர்மைதின்

மார்க்சிஸ்ட் கட்சிதாலுகா செயலாளர் கிருஷ்ணமூர்த்தி எஸ்டிபிஐ முகமது இஸ்மாயில்,நாசிர் முஸ்லிம் லீக் மைதீன் பிச்சை இலியாஸ், மதிமுக நகர செயலாளர் ரத்தினவேல் குமார் மனிதநேய மக்கள் கட்சி முகமது இஸ்மாயில் தொமுச மண்டல அமைப்புச் செயலாளர் மைக்கேல் நெல்சன் திமுக மாவட்ட பொருளாளர் சரவணன் திமுக மூத்த உறுப்பினர் சங்கரதாஸ் பொதுக்குழு உறுப்பினர் மகேஸ்வரி மாவட்ட வழக்கு இளைஞர் அணி தலைவர் முத்துராமலிங்கம் மகளிர் அணி அன்புமணி கணேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ராஜராஜன் கார்த்தி ராஜ் மாணவர் அணி வெங்கடேஷ் வீரமணி ஐடி லிங்க் சிவசங்கர நாராயணன் வர்த்தக அணி ரகுமான் மற்றும் ஜெயகுமார் உள்பட மாநில மாவட்ட ஒன்றிய நகர கிளை வார்டு பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

## நாகர்கோவில் அருகே தனியார் நர்சிங் கல்லூரி அருகில் இளம் பெண் எலும்பு கூடாக மீட்பு

இரணியல் பிப். 14-

நாகர்கோவில் அருகே தனியார் நர்சிங் கல்லூரி அருகில் இளம்பெண் எலும்பு கூடாக மீட்கப்பட்ட சம்பவம் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

சுங்கான்கடை அம்பேத்கார்நகர் தாண்டி ஒதுக்குப்புறத்தில் புதர்கள் மண்டி கிடக்கும் பகுதியில் மனித எலும்பு கூடு எரிந்த நிலையில் கிடைப்பதாக நள்ளிரவில் இரணியல் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக சம்பவ இடம் சென்ற போலீசார் அங்கு கிடந்த உடலை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது அந்த உடன் முழுவதும் எரிந்த நிலையில் வெறும் எலும்பு கூடுகள் மட்டுமே கிடந்தது.

உடல் திமிறி எழாதவாறு மெல்லிய கம்பியால் சுற்றி கட்டப்பட்டு எரித்து இருந்ததும் தெரிய வந்தது. எலும்புக்கூட்டில் நீண்ட தலை முடி கருகிய நிலையிலும், அருகே ஹேர்பின், பெண்கள் அணியும் உள்ளாடை, சேலை ஆகியவை எரிந்த நிலையிலும் காணப்பட்டது. இதனால் எரிந்து எலும்பக் கூடாக கிடந்தது இளம் பெண் என தெரியவந்துள்ளது. இந்த இளம் பெண் யார்? என உடனடியாக போலீசாருக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை.

சுங்கான்கடை பகுதியில் தனியார் நர்சிங் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, மகளிர் கலை அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி என ஏராளமான கல்லூரிகள் உள்ளன. கல்லூரிகளில் மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகளும் அதிக அளவில் உள்ளன. இதனால் கல்லூரி மாணவிகள் யாராவது காணாமல் போய் இருக்கிறார்களா? என போலீசார் விசாரணையை தொடங்கி உள்ளனர். அதே போன்று சமீபத்தில் குமரி மாவட்டத்தில் காணாமல் போன இளம் பெண்கள் குறித்தும் பதிவான வழக்குகள் குறித்தும் சேகரித்து வருகின்றனர்.




கிருஷ்ணகிரியில் குழந்தை திருமணம் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரம் நடைப்பெற்றது, இதில் குழந்தை திருமணத்தை தவிர்க்கப்பட வேண்டும் என்பதுதை வலியுறுத்தி துண்டு பிரசூரம் வழங்கப்பட்டது

## மகா சிவராத்திரி முன்னிட்டு குமரி மாவட்டத்தில் நடக்கும் சிவாலய ஓட்டம் இன்று முஞ்சிறையில் இருந்து துவக்கம்

மார்த்தாண்டம், மார்ச்.14-

நாட்டில் வேறெங்கும் இல்லாத வகையில் மஹா சிவராத்திரி தினத்தில் 12 சிவ ஆலயங்களை ஓடி சென்று தரிசிக்கும் முறை கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே உள்ளது. பாரம்பரியமாக நடக்கும் இந்த நிகழ்வு வரலாற்று சிறப்பு மிக்கதாக கருதப்படுகிறது.

இந்த ஓட்டத்தில் கலந்து கொள்ளும் பக்தர்கள் மாசி மாதம் ஏகாதசி தினத்தில் மாலை அணிந்து விரதம் இருக்க துவங்குவார்கள். விரத நாளில் தீயினால் வேக வைக்கும் அனைத்து உணவுகளையும் தவிர்த்து விரதம் இருப்பார்கள். குறிப்பாக நுங்கு, இளநீர், பதநீர் , பழங்கள் சாப்பிடுவது வழக்கம். மட்டுமின்றி விரத நாட்களில் காலை மாலைகளில் சிவ ஆலயத்தின் அருகில் உள்ள நீர்நிலைகளில் நீராடிவிட்டு, ஈர துணியுடன் சிவபெருமானை தரிசிப்பார்கள்.

இந்த வருட சிவாலய ஓட்டம் இன்று 14-ம் தேதி துவங்குகிறது. இன்று அதிகாலை புதுக்கடை அருகே முஞ்சிறையில் உள்ள திருமலை மகாதேவர் ஆலயத்தில் இருந்து பக்தர்கள் இந்த ஓட்டத்தை துவங்குகின்றனர். அங்கிருந்து திக்குறிச்சி மகாதேவர் ஆலயம் , திற்பரப்பு வீரபத்திரர் ஆலயம், திருநந்திக்கரை நந்தீஸ்வரர் ஆலயம் , பொன்மனை மகாதேவர் ஆலயம், பன்னிப்பாக்கம் மகாதேவர் ஆலயம், கல்குளம் நீலகண்ட சாமி ஆலயம், மேலாங்கோடு, திருவிடைக்கோடு, திருவிதாங்கூர், திருப்பன்றியோடு மகாதேவர் ஆலயங்கள் சென்று நாளை மாலையில் நட்டாலம் சங்கரநாராயணர் கோவில் வந்தடைகின்றனர். அங்கு இரவு முழுவதும் தூங்கா நோன்பிருந்து ஓட்டத்தை நிறைவு செய்கின்றனர்.


சிவாலய ஓட்டத்துக்கு குமரி மாவட்டம் மட்டுமின்றி, தமிழகத்தின் பிற மாவட்டம் மற்றும், கேரளா மாநிலங்களில் இருந்து ஏராளம் பக்தர்கள் வாகனங்களில் வந்து தரிசிப்பது வழக்கம். இந்த ஊட்டத்தில் பங்கு பெறும் பக்தர்களுக்கு முஞ்சிறை முதல் திருப்பன்றியோடு வரையிலான 11 ஆலயங்களில் விபூதி பிரசாதமாக வழங்கப்படும். கடைசி கோவிலான நட்டாலத்தில் மட்டும் சந்தனம் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

சிவாலய ஓட்டம் முன்னிட்டு முதல் ஆலயமான முஞ்சிறையில் சிவா பக்தர்கள் சங்கம் சார்பில் பக்தர்களுக்கு தேவையான அடைப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக சங்கம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.



திருப்பூர் மாநகராட்சி வடக்கு மாவட்ட திமுக வடக்கு மாநகரம் 15 வேலம்பாளையம் பகுதி கழகத்திற்கு உட்பட்ட 10 வது வார்டு கவுன்சிலர் திருமதி பிரேமலதா கோட்டா பாலு தலைமையில் வார்டு செயலாளர் சசிகுமார் முன்னிலையில் ஆத்துப்பாளையம் ரோடு அனுப்புர்பாளையத்தில் மகளிர் உரிமைத் தொகை 5000 ரூபாயை வங்கிக் கணக்கில் வரவு வைத்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக பட்டாசு வெடித்து இனிப்புகள் கொடுத்து கொண்டாடப்பட்டது இந்த நிகழ்வில் பகுதி துணை செயலாளர் மணிமாறன்.வார்டு துணைசெயலாளர் காயத்திரிநகர் பாலு. பொருளாளர் ரமேஷ். மற்றும் நிர்வாகிகள் மனோகரன். கிருஷ்ணன். நாகராஜ். கஜேந்திரன். ஆறுச்சாமி.ரெட்டி.வனிதா.கீதா.புஷ்பா. ஷாலினி. கோமதி. மற்றும் திமுக தலைமையிலான கூட்டணி கட்சி நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

# விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு அதிமுக மற்றும் கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்



விளாத்திகுளம், பிப்ரவரி. 14-

தமிழகத்தில் கிராம மக்களின் 125 நாட்கள் வேலை உறுதித்திட்டத்தை சீர்குலைக்க முயலும் ஆளும் திமுக அரசை கண்டித்து அதிமுக சார்பில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அதிமுக கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்

அதன்படி தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக விளாத்திகுளம் அதிமுக ஒன்றிய செயலாளர்கள் மகேஷ், இராமச்சந்திரன், பால்ராஜ் ஆகியோரின் ஏற்பாட்டில் தூத்துக்குடி வடக்கு மாவட்டம் அம்மா பேரவை இணைச் செயலாளர் குட்லக் செல்வராஜ், முன்னிலையில், விளாத்திகுளம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என். கே பெருமாள், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சத்யா, தூத்துக்குடி வடக்கு மாவட்ட பாஜக தலைவர் சரவண கிருஷ்ணன், அதிமுக அம்மா ஜெபேரவை செயலாளர் வரதராஜ பெருமாள் மாவட்ட தகவல் தொழில்நுட்பபிரிவு மோகன் தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆனந்த்,சுரேஷ், வடக்கு மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளர் பிரியா, மகளிர் அணி சாந்தி,அம்மா மக்கள் முன்னேற்ற கழக மகளிர் மாநில நிர்வாகி செல்வி, அதிமுக மற்றும் பாமக, பாஜக, தமிழ் மாநில காங்கிரஸ் உள்ளிட்ட இந்திய கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு 125 நாள் வேலை உறுதித்திட்டத்தை சீர்குலைக்கும் திமுக அரசை கண்டித்து கைகளில் பதாகைகளை ஏந்தியபடி பல்வேறு கண்டன கோஷங்களை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவர் நியமனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் நிர்வாகிகள் போராட்டம் நடத்த முடிவு



தென்காசி, பிப்.14-

தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவராக ஆலங்குளம் செல்வராஜ் நியமிக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தென்காசி மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் விரைவில் மாநில காங்கிரஸ் தலைவர்கள், அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களை நேரில் சந்தித்து புதிய காங்கிரஸ் தலைவரை நியமிக்க கோரிக்கை மனு கொடுக்க இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மாநில சோனியா காந்தி பேரவையின் பொதுச்செயலாளரும், தென்காசி மாவட்ட அனைத்து ஊராட்சிகள் கூட்டமைப்பின் தலைவரும், கோவிந்தப்பேரி ஊராட்சி மன்றத் தலைவருமான, கடையம் டி.கே.பாண்டியன் தென்காசியில் பத்திரிகையாளர்களை சந்தித்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவரை தேர்ந்தெடுக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக அகில இந்திய காங்கிரஸ் ஒரு குழுவை அனுப்பினார்கள். அதன்படி தென்காசி மாவட்டத்திற்கு சத்தீஸ்கர் மாநிலத்தைச் சார்ந்த லக்கி என்பவருடன் ஐந்து பேர் கொண்ட குழுவை அனுப்பி வைத்தனர். அவர்கள் 10 வட்டாரங்கள், 6 நகராட்சிகள், 9 பேரூராட்சிகள், 221 ஊராட்சிகள், ஐந்து சட்டமன்ற தொகுதிகளை கொண்ட தென்காசி மாவட்ட பொறுப்பாளர்கள் ஒவ்வொருவரையும் சந்தித்து ஐந்து நாட்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி அவர்கள் அனைவரது கருத்துக்களையும் கேட்டனர்.

தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவர் பதவிக்கு விண்ணப்ப மனு கொடுத்த அனைவரது தகுதி திறமை கட்சிப் பணி நிர்வாகிகளின் ஆதரவு என்கிற அடிப்படையில் விண்ணப்ப மனு கொடுத்த பெயர்களை எல்லாம் எடுத்துச் சென்ற குழுவினர் அவர்களில் 6 நபர்களை தேர்வு செய்து அதிலும் ஒரு நபரை தகுதியின் அடிப்படையில் ஒரு நபரை மாவட்ட காங்கிரஸ் தலைவராக நியமனம் செய்வதற்காக நமது மேலிட பார்வையாளர் எடுத்துச் சென்றார்.

அதனைத் தொடர்ந்து தகுதியின் அடிப்படையில் மாவட்ட தலைவர் நியமனம் செய்வதாக கூறிவிட்டு கடந்த 18.01.2026 அன்று உடல்நலம் குன்றிய, வயது முதிர்ந்த சிறப்பாக செயல்பட முடியாத ஆலங்குளம் செல்வராஜ் என்பவரை அறிவித்துள் ளார்கள். இந்த அறிவிப்பை கேட்டு தென்காசி மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் அனைவரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தில் 80 சதவீத காங்கிரஸ் நிர்வாகிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இப்போது தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ள ஆலங்குளம் செல்வராஜுக்கு எதிராக அனைத்து வட்டார காங்கிரஸ் தலைவர்கள், மாவட்ட காங்கிரஸ் துணை தலைவர்கள், பொதுச் செயலாளர்கள், பொருளாளர் ,செயலாளர்கள் நகர காங்கிரஸ் கிராம காங்கிரஸ் இளைஞர் காங்கிரஸ் மகிளா காங்கிரஸ், மாணவ காங்கிரஸ் மற்றும் காங்கிரஸ் துணை அமைப்பை சேர்ந்தவர்களின் எண்ணங்களுக்கு எதிராக ஆலங்குளம் செல்வராஜை நியமனம் செய்து உள்ளனர்.

இந்த நியமனத்தை 85 சதவீதம் காங்கிரஸ் நிர்வாகிகள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். எனவே உடனடியாக அவரை பதவி நீக்கம் செய்துவிட்டு தகுதி வாய்ந்த ஒரு இளைஞரை இந்த பதவியில் நியமிக்க வேண்டும் இந்த நியமனத்தை கண்டித்து ஏராளமான நிர்வாகிகள் மாநில காங்கிரஸ் தலைமைக்கு தனது எதிர்ப்பை தெரிவித்து பல்வேறு கடிதங்கள் அனுப்பியும் இதுவரை அந்த கடிதங்கள் எதுவும் மாநில தலைவரை சென்றடைந்ததாக தெரியவில்லை.

எனவே தென்காசி மாவட்ட காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகளை சந்தித்து அவர்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறும் வகையில் நமது உள்ளாட்சி பிரதிநிதிகள் காங்கிரஸ் பொறுப்பாளர் களை சந்தித்து கையெழுத்து வாங்கியுள்ளோம். அதில் தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த 80 சதவீத காங்கிரஸ் நிர்வாகிகள் தென்காசி மாவட்ட தலைவர் ஆலங்குளம் செல்வராஜ் நியமனத்துக்கு எதிராக கையெழுத்து போட்டுள்ளனர்.

அதை நேரடியாக அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் தமிழக காங்கிரஸ் தலைவர்கள் பொதுச் செயலாளர் மற்றும் அனைவரையும் நேரில் சந்தித்து மனுக்களை கொடுக்க இருக்கிறோம்.

தென்காசி மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகள் பாராளுமன்ற தொகுதியில் பலமுறை காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இப்போது தேர்தல் நெருங்கி வரும் நிலையில் 85% காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு எதிராக ஒருவரை மாவட்ட தலைவராக நியமனம் செய்தால் தேர்தல் களத்தில் காங்கிரஸ் நிர்வாகிகள் செயல்படுவதில் தடுமாற்றம் ஏற்படும். எனவே உடனடியாக மாநில காங்கிரஸ் நிர்வாகிகள் இந்த பிரச்சனையில் தலையிட்டு தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவராக தகுதி வாய்ந்த ஒருவரை தன்னலம் கருதாது உழைக்கக்கூடிய ஒரு இளைஞரை தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவராக நியமிக்க வேண்டும் என்று அவர்கள் அந்த கோரிக்கை மனுவில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஆலங்குளம் செல்வராஜை பதவி நீக்கம் செய்துவிட்டு தகுதி வாய்ந்த ஒருவரை தென்காசி மாவட்ட தலைவராக நியமிக்க கோரி 85 சதவீத காங்கிரஸ் நிர்வாகிகள் கையொப்பமிட்டுள்ள அந்த கோரிக்கை மனுவினை டெல்லிக்குச் சென்று காங்கிரஸ் தலைவர் கார்கே மற்றும் ராகுல் காந்தியை சந்தித்து கோரிக்கை மனுவினை கொடுக்கவும், சென்னையில் சத்தியமூர்த்தி பவனில் உள்ள காங்கிரஸ் மாநில தலைவரை சந்தித்து இந்த கோரிக்கை மனுவினை வழங்க இருக்கிறோம்.

அதன் பிறகும் உரிய நடவடிக்கை எடுக்க தாமதித்தால் மார்ச் முதல் வாரத்தில் ஆயிரக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்களை திரட்டி பெரிய அளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். பத்திரிக்கையாளர்கள் சந்திப்பின்போது தென்காசி மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் வேலுச்சாமி, தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர் யூசுப் ,மாநில சோனியா காந்தி பேரவை துணைத் தலைவர் கோதரி, கீழப்பாவூர் நகர முன்னாள் காங்கிரஸ் தலைவர் பொன் ராஜகோபால் ஆகியோர் உடன் இருந்தனர்.

உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை
Whatsapp-ல்
பின் தொடர

# களியக்காவிளை அருகே காதல் தோல்வியால் இளைஞர் காங்கிரஸ் பொறுப்பாளர் தூக்கிட்டு தற்கொலை




களியக்காவிளை, பிப்.14-

களியக்காவிளை, வன்னியூர் பகுதியைச் சேர்ந்தவர் ஆண்டனி இவரது மகன் அபிஸ் (28 ). ,இவர் பொறியியல் பட்டதாரி, தற்போது வீட்டு அருகாமையில் இருசக்கர வாகன சர்வீஸ் ஸ்டேஷன் நடத்தி வருகிறார். மேலும் இவர் இளைஞர் காங்கிரசில் விளவங்கோடு சட்டமன்ற தொகுதி பொறுப்பிலும் உள்ளார். அபிஸ் ஒரு பெண்ணை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது .தற்போது அந்த பெண் அபிஸிடம் பேசுவதை நிறுத்தியுள்ளார். இதனால் மனம் உடைந்து போன அபிஸ் வீட்டுக்கு சென்று அறை கதவை பூட்டி உள்ளார். இதனால் சந்தேகம் அடைந்த தாயார் ஜன்னல் வழியாக பார்த்தபோது தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக அவரது தாயார் கத்தி கூச்சல் இட்டுள்ளார். இதை அடுத்து அக்கம் பக்கத்தினர் விரைந்து சென்று கதவை உடைத்து உள்ளே சென்று அவரை மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். இதை அடுத்து மருத்துவர்கள் அவரை பரிசோதித்த போது அவர் ஏற்கனவே மரணமடைந்தது தெரிய வந்தது. இது குறித்து கொடுத்த புகாரின் பேரில் களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராமநாதபுரம் பகுதியில் 3200 வீடுகளுக்கு இயற்கை எரிவாயு இணைப்பு




ராமநாதபுரம், பிப்.14-

ராமநாதபுரம் நகராட்சி சுற்றியுள்ள பகுதிகளில் வீடுகளுக்கு இயற்கை எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது தொடர்ந்து விரைவில் ராமநாதபுரம் நகராட்சி பகுதி முழுவதும் குழாய் இணைப்பு வழங்கப்பட உள்ளது.

இது குறித்து ஏஜி அண்ட் பி எரிவாயு நிறுவனம் அதிகாரி கூறியதாவது:

இயற்கை எரிவாயு வீட்டு பெண்களின் பாதுகாப்பு வசதி மற்றும் நேர சேமிப்பை கருத்தில் கொண்டு வீட்டு பயன்பாட்டிற்கான பிஎன்ஜி இணைப்புகளுக்கு ஏஜி அண்ட் பி நிறுவனம் சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது. ராமநாதபுரம் நகராட்சி அருகே உள்ள சக்கரக்கோட்டை, பேராவூர், பட்டணம் காத்தான், குயவன்குடி, இளமனூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பிப்.10 ம் தேதி நிலவரப்படி 3200க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு இயற்கை எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 8,000 க்கும் மேற்பட்ட நபர்கள் இணைப்பிற்காக பதிவு செய்துள்ளனர். இதில் 4500 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு மீட்டர் பொருத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இயற்கை எரிவாயு இணைப்புகளை வழங்குவதற்கு பல்வேறு துறைகளில் ஒப்புதலுடன் ஏஜி அண்ட் பி நிறுவனம் திட்டமிட்ட முறையில் பணிகளை அனைத்து பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி வருகிறது. குறிப்பாக ராமநாதபுரம் நகராட்சி பகுதிகளுக்கு மிக விரைவில் இயற்கை எரிவாயு குழாய் வலையமைப்பு விரிவு படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தில் பிரிப்பெய்டு என்ற புதிய மீட்டர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் வசதிக்கேற்றவாறு ரீசார்ஜ் செய்து கொள்ளலாம். பயன்படுத்திய அளவிற்கு மட்டும் எரிவாயு செலவு ஏற்படும். வெளிப்படையான கணக்கு முறை பின்பற்றப்படும். நாடு முழுவதும் இயற்கை எரிவாயு இணைப்புகளை அதிகரிக்கும் நோக்கில் ஒரு சிறப்பு தேசிய இயக்கத்தை தொடங்கியுள்ளது. இந்த இயக்கத்தில் ஏஜி அண்ட் பி நிறுவனம் முழுமையாக பங்கேற்று கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தும் வீட்டு இணைப்புகளை துரிதமாக வழங்கியும் செயல்பட்டு வருகிறது. இயற்கை எரிவாயு இணைப்பிற்கு பதிவு செய்ய விருப்பம் உள்ளவர்கள் உடனடியாக பதிவு செய்து பாதுகாப்பான சுத்தமான வசதியான எரிவாயு சேவையை பெற்று பயனடையலாம்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# முதுகுளத்தூரில் அதிமுக கண்டன ஆர்ப்பாட்டம்



முதுகுளத்தூர், பிப்.14-

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் அதிமுக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் சார்பாக திமுக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அதிமுக மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.டி. செந்தில்குமார் தலைமையில் கண்டன கோஷம் தொடங்கியது இக்கூட்டத்தில் மாநிலங்களவை உறுப்பினர் தர்மர் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.முருகன், மற்றும் மலேசியா எஸ். பாண்டியன் உட்பட அதிமுக மேற்கு ஒன்றிய செயலாளர் கர்ணன் கிழக்கு ஒன்றிய செயலாளர் கருப்புசாமி முதுகுளத்தூர் பேரூர் கழக பொறுப்பாளர் கதிரேசன் மாவட்ட எம்ஜி ஆர். மன்ற இணை செயலாளர் கண்ணன் மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் சிங்கராஜ் ஒன்றியவிவசாய செயல்வளர் ஜெயகாந்த் மாவட்ட எம்ஜி ஆர் மன்ற இணைச் செயலாளர் கண்ணன் கிளைச் செயலாளர் செல்லையா பாரதிஜனதா கட்சி நிர்வாகிகள் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் மாநில விளையாட்டு பிரிவு செயலாளர் மேற்கு ஒன்றிய தலைவர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை அண்ணாநகரில் நவீன தொழில் நுட்ப கருவிகளுடன் கூடிய ஒலிம்பிக் ஜெராக்ஸ் (www.onlineprintingz.com) நிறுவனத்தை தமிழ்நாடு வர்த்தகம் மற்றும் தொழில் துறை சங்கத்தின் தலைவர் டாக்டர் என். ஜெகதீசன் கலந்து கொண்டு திறந்து வைத்தார். உடன் (இ வ) நிறுவனர் முஹம்மது ரபீக் ராஜா, ஷமீம் ஆயிஷா. மகமுதா பேகம், ஜமான் மற்றும் முகமது ரஃபி ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கிராம மக்களின் 125 நாள் வேலை திட்டத்தை சீர்குலைக்கும் திமுக அரசை கண்டித்து அதிமுக ஆர்ப்பாட்டம்



இராமநாதபுரம்.பிப்.14-

ராமநாதபுரம் அரசு பேருந்து பணிமனை முன்பு கிராம மக்களின் 125 நாள் வேலை உறுதி திட்டத்தை சீர்குலைக்க முயலும் திமுக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் முன்பும் கிராம மக்களின் 125 நாள் வேலை உறுதித் திட்டத்தை சீர்குலைக்க முயலும் ஸ்டாலின் அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதன் ஒரு பகுதியாக ராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அரசு பேருந்து பணிமனை முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அதிமுக எம்.ஜி.ஆர் மன்ற துணைச் செயலாளரும்,மாவட்ட அவைத் தலைவருமான எம்.சாமிநாதன் இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை இணைச் செயலாளர் கே.பி.எம் நாகேந்திர சேதுபதி ஆகியோர் தலைமை வகித்தனர்.

மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் வேலுச்சாமி,மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் நாகராஜன்,மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் கவிஞர் கே.ராமநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளை சேர்ந்த ஆண்கள், பெண்கள் என சுமார் 500 க்கும் மேற்பட்டவர்கள் பக்கேற்று திமுக அரசிற்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை அதிமுக ராமநாதபுரம் நகர செயலாளர் பொறியாளர் என்.ஆர்.பால்பாண்டியன் ராமநாதபுரம் தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.அசோக்குமார்,வடக்கு ஒன்றிய செயலாளர் பா.கோட்டைச்சாமி ஆகியோர் செய்திருந்தனர்.



தருமபுரி மாவட்டம் கடத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஒடசல்பட்டியில் தமிழக அரசின் சாதனைகள், திட்டங்கள் விளக்க புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# பொது அறிவிப்பு

வருவாய் கோட்ட அலுவலகம், பட்டுக்கோட்டை
ந.க.6913/2025/அ 5 நாள் 13.02.2026

கணேசமூர்த்தி த/பெ.ரெங்கசாமி பட்டு விடுதி வடக்கு தெரு ஊரணிபுரம், திருவோணம் வட்டம், தஞ்சாவூர், மாவட்டம்.

–மனுதாரர்

எதிர்

இல்லை

–எதிர் மனுதாரர்

அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் வட்டம் மேற்படி முகவரியில் வசிக்கும் கணேசமூர்த்தி ஆகிய நான் கொடுக்கும் அறிவிப்பு என்னவென்றால் எனது தந்தை வழி தாத்தா முருகன்
த/பெ.முத்தையா என்பவர் கடந்த 30.10.1965 ஆண்டு தேதியன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். அவரது இறப்பை அறியாமையினாலும், கவனக் குறைவினாலும் பதிவு செய்ய தவறி விட்டேன். எனவே தற்போது காலதாமதக் கட்டணத்துடன் பதிவு செய்ய உத்தரவிட வேண்டுமாய் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு மனு செய்திருந்தேன். அம்மனு விசாரணையில் உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை எதுவும் இருப்பின் இவ்வறிவிப்பு பிரதி வெளியான நாள் முதல் 15 நாட்களுக்குள் கனம் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் மனு அனுமதிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர் கணேசமூர்த்தி

# பொது அறிவிப்பு

வருவாய் கோட்ட அலுவலகம், பட்டுக்கோட்டை.
ந.க.6909/2025/அ5 நாள் 13.02.2026

கணேசமூர்த்தி த/பெ.ரெங்கசாமி பட்டு விடுதி வடக்கு தெரு, ஊரணிபுரம், திருவோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

–மனுதாரர்

–எதிர்–

இல்லை

–எதிர் மனுதாரர்

அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் வட்டம் மேற்படி முகவரியில் வசிக்கும் கணேசமூர்த்தி ஆகிய நான் கொடுக்கும் அறிவிப்பு என்ன வென்றால், எனது பாட்டி பழனியாயி க/பெ.முருகன் என்பவர் கடந்த 25.08.1989 ஆண்டு தேதியன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். அவரது இறப்பை அறியாமையினாலும், கவனக் குறைவினாலும் அந்நேரத்தில் பதிவு செய்ய தவறி விட்டேன். எனவே தற்போது காலதாமதக் கட்டணத்துடன் பதிவு செய்ய உத்தரவிட வேண்டுமாய் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு மனு செய்திருந்தேன். அம்மனு விசாரணையில் உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை எதுவும் இருப்பின் இவ்வறிவிப்பு பிரதி வெளியான நாள் முதல் 15 நாட்களுக்குள் கனம் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் மனு அனுமதிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர் கணேசமூர்த்தி

# சார்பதிவாளர் புதிய கட்டிடம் திறப்பு விழா



திண்டுக்கல் பிப். 14-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகாவில் புதிதாக சார்பு பதிவாளர் கட்டிடம் திறக்கப்பட்டதுஇந்த விழாவில் முதலமைச்சர் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

இந்த விழாவில் திண்டுக்கல் மாவட்ட மண்டலபத்திரப்பதிவு இயக்குனர் மகேஷ்அவர்களும் துணை உதவி இயக்குனர் ஆர் பழனிச்சாமி அவர்களும் ஓய்வு சார்பதிவாளர் குணசேகரன் அவர்களும் தற்போதைய சார் பதிவாளர் பார்த்திபன் அவர்களும் மற்றும் உதவி சார் பதிவாளர் அர்ஜுன் அவர்களும் மற்றும் சார் பதிவாளர் ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர் சிறப்பு அழைப்பாளராக வடக்கு ஒன்றிய செயலாளர் மணிகண்டன் பி ஏ பி எல் அவர்களும் பேரூராட்சி துணை தலைவர் எஸ்பி முருகேசன்நகர செயலாளர் ஜோசப் கோவில் பிள்ளை அவர்களும்மற்றும் கழகத் தொண்டர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு இந்த சார்பு ஆய்வாளர் கட்டிடத் திறப்பு விழாவை மகிழ்ச்சியுடன் திறந்து வைத்தனர்

# தென்காசியில் மத்திய அரசை கண்டித்து இந்தியா கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி, பிப்.14-

தென்காசி மாவட்டம் தென்காசி கொடிமரத்திடலில் மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டு தொடர்ந்து தமிழ் நாட்டை வஞ்சிக்கும் மேலும் 100 நாள் வேலைத்திட்டத்தை நிறுத்த முயற்சிக்கும் மத்திய பாஜகஅரசை கண்டித்தும் அதற்கு துணை போகும் அதிமுகவை கண்டித்தும் இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர் தலைமையில் நடைபெற்றது கண்டன ஆர்ப்பாட்டத்தில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ,தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன், தென்காசி தெற்கு மாவட்ட மதிமுக செயலாளர் உதயசூரியன் ஆகியோர் கலந்து கொண்டு மத்திய அரசை கண்டித்து கண்டன உரை ஆற்றினார்கள் அதனை தொடர்ந்து இந்தியா கூட்டணி கட்சிகளின் முக்கிய நிர்வாகிகள் மத்திய அரசை கண்டித்து கண்டன உரை ஆற்றினார்கள்

இறுதியாக தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமையில் மத்திய அரசை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன. கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு தென்காசி தெற்கு மாவட்ட பொறியாளர் அணி தலைவர் தங்கபாண்டியன் நன்றி உரை ஆற்றினார். கண்டன ஆர்ப்பாட்டத்தில் தென்காசி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ஜெயபாலன் கலை கதிரவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் உச்சி மாகாளி, மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் நயினார் முகமது, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் எட்டப்பன் கரு. வீரபாண்டியன் மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்




## சிவாலய ஓட்டம் : பக்தர்களின் பாதுகாப்புக்காக 14,15 ஆகிய இரு தினங்களுக்கு கனிமவள டாரஸ் வாகனங்கள் மாவட்டத்திற்குள் நுழைய தடை

நாகர்கோவில், பிப்.14–

சிவாலய ஓட்ட பாதுகாப்பு பணிகளுக்காக கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சுமார் 1000 போலீசார் இந்த பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்

மேலும் சாலையில் செல்லும் பக்தர்களின் பாதுகாப்பிற்காக 14,15 ஆகிய தேதிகளில் கனிம வள டாரஸ் வாகனங்களுக்கு மாவட்டத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும் எஸ் பி ஸ்டாலின் தலைமையில் சுமார் 1000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். சிவாலய ஓட்ட பக்தர்களுக்கு விரிவான பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளை மாவட்ட காவல்துறையினர் செய்துள்ளனர்.

இதில் ஒவ்வொரு 2 கி.மீ. தூரத்திற்கும் இருசக்கர வாகன ரோந்து என மொத்தம் 44 இரு சக்கர வாகன ரோந்தில் 88 போலீசார் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

போக்குவரத்து ஒழுங்குமுறை மற்றும் பார்க்கிங் வசதிகளுக்காக தனி போலீசார் பணியமர்த்தப்படுவார்கள்.

முக்கியமான இடங்களில் பக்தர்களுக்கு உதவ "May I Help You" சாவடிகள் நிறுவப்படும்.

பக்தர்களின் பாதுகாப்பிற்கு அவர்களின் பைகளில் பிரதிபலிப்பு ஸ்டிக்கர்கள் ஒட்டப்படும். பக்தர்களுக்கு வழிகாட்ட 12 இடங்களில் திசைமற்றும் தூரம் காட்டும் வரைபடங்கள் நிறுவப்படும். பெண் பக்தர்களுக்கு உதவ பெண் காவலர்கள் நியமிக்கபடுவார்கள்



நீலகிரி மாவட்டம் குன்னூர் தொகுதிக்கு உட்பட்ட பெட்டட்டி சுங்கம் பகுதியில் ஒன்றிய செயலாளர் பிரேம் குமார் தலைமையில் தமிழக அரசு கொறடா கா. ராமச்சந்திரன் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தின் போது மத்திய அரசின் மக்கள் விரோத போக்கை கண்டித்து கண்டன கோஷம் எழுப்பினர். இதில் நீலகிரி மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் காளிதாசன் ஜெயக்குமார் விக்னேஷ் உபதலை செயலாளர் ராஜதினம் மற்றும் கழகத்தின் மாநில மாவட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவில் தலைமை அஞ்சலகத்தில் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு மருத்துவ முகாம்.



நாகர்கோவில், பிப். 14-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் தலைமை அஞ்சலகத்தில் பணிபுரிகின்ற அனைத்து தரப்பட்ட அஞ்சல் ஊழியர்கள், அஞ்சல் துறையின் வாடிக்கையாளர்கள், மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு மருத்துவ முகாம் நாகர்கோவில் அஞ்சல் கோட்டை சார்பில் மருத்துவ முகாம் நடைபெற்றது.கன்னியாகுமரி மாவட்டத்தின் அஞ்சல் துறை கண்காணிப்பாளர் செந்தில் குமார் தலைமையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் வாசன் ஐ கேர் மருத்துவமனை சார்பாக கண் பரிசோதனையும்,

கிம்ஸ் மருத்துவமனையின் சார்பாக பொது மருத்துவம் பிபி சுகர் போன்ற பரிசோதனைகள் செய்யப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டது. மேலும் அப்பல்லோ டென்டல் கிளினிக்கின் மூலமாக பல் மருத்துவம் சார்பான சோதனைகளும் செய்யப்பட்டு உரிய மருத்துவ சிகிச்சைகளும் அளிக்கப்பட்டது. இதில் சுமார் 150 க்கு மேற்பட்ட அஞ்சலக ஊழியர்களும் 200க்கும் அதிகமான வாடிக்கையாளர்களும் பயன்பட்டனர். மேலும் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை நாகர்கோவில் தலைமை அஞ்சலகத்தின் முதுநிலை அஞ்சலக தலைவர் சுரேஷ் செய்திருந்தார்.



தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் அலுவலகம் அருகில் மாவட்ட அதிமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் சார்பில் திமுக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ் ஆர் வெற்றிவேல் தலைமையில் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் கிராம மக்களின் 125 நாள் வேலை உறுதி திட்டத்தை சீர்குலைக்க முயலும் திமுக அரசை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் இதில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக தலைமை நிலை செயலாளர் டி .கே. ராஜேந்திரன், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பி. வெங்கடேஸ்வரன், அண்ணா தொழிற்சங்க மாவட்ட செயலாளர் பழனிச்சாமி, நல்லம்பள்ளி ஒன்றிய செயலாளர்கள் சிவப்பிரகாசம், பழனி மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

விறு விறுப்பான செய்திகளுக்கு தினமும் 'தின தமிழ்' படியுங்கள் !

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காரைக்குடியில் திறந்து வைக்கப்பட்டுள்ள அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரும் மாணவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைத்து மாணாக்கர்களின் சார்பில் நன்றியினை தெரிவித்தார் !





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து தரப்பு மக்களும் பயன் பெறுகின்ற வகையில், எண்ணற்ற நலத்திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி, பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக, நாட்டின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகித்து வரும் இளைஞர்களை சிறந்த முறையில் உருவாக்குவதற்கென, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை தொலைநோக்கு சிந்தனையுடன் சிந்தித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்தவகையில், தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களைத் தொடங்குதல், அதன்

வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தில், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதி வாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில " புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயில " தமிழ்ப்புதல்வன்" திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூபாய் 1,000/- உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால், அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

ஏழை எளிய கிராமப்புற மாணாக்கர்களின் உயர்கல்வித் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு, 2025-2026 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில், பல்வேறு மாவட்டங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்காளல் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், மாணாக்கர்கள் சிறந்த முறையில் கல்வி பயில வேண்டும் என்ற உன்னத நோக்கில், தமிழகம் முழுவதும் பல்வேறு கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில், சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் ரூபாய் 100 கோடியே 45 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசுசட்டக் கல்லூரி வளாகக் கட்டடத்தினை, 31.1.2026 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் திறந்து வைத்துள்ளார்கள். இப்புதிய சட்டக் கல்லூரி வளாகக் கட்டடமானது 19.15 ஏக்கர் பரப்பளவில் நிருவாகம் மற்றும் கல்விக் கட்டடம், கலையரங்கம், முதல்வர் குடியிருப்பு, ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, ஆண்கள் விடுதி காப்பாளர் குடியிருப்பு, பெண்கள் விடுதி காப்பாளர் குடியிருப்பு, ஆண்கள் கழிவறை, பெண்கள் கழிவறை, மாற்றுத்திறனாளிகளுக்கான கழிவறைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வளாகத்தின் தரைத் தளத்தில் முதல்வர் அறை, அலுவலகம், பதிவு அறை, பொருளாளர் அறை, உடற்கல்வி இயக்குநர் அறை, கலந்தாய்வுக்கூடம், காத்திருப்பு அறை, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான அலுவலர் அறை, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான புதிய உணவு அறை, வகுப்பறைகள், ஆண்கள் கழிவறை, பெண்கள் கழிவறை, மாற்றுத்திறனாளிகளுக்கான கழிவறைகள் அமைந்துள்ளது. முதல் தளத்தில் கருத்தரங்கம், நீதிமன்ற மாதிரிக் கூடம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான அலுவலர் அறை, வகுப்பறைகள், ஸ்மார்ட் வகுப்பறைகள், கணினி ஆய்வகம், ஆண்கள் கழிவறை, பெண்கள் கழிவறை, மாற்றுத்திறனாளிகளுக்கான கழிவறைகள் அமைந்துள்ளது.

இரண்டாம் தளத்தில் நூலகம், நவீன நூலகம், நூலகர் அறை, உதவி நூலகர் அறை, படிப்பறை, புத்தக வைப்பு அறை, மொழி ஆய்வகம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான உள் விளையாட்டு அரங்கம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஓய்வு அறை, ஆண்கள் கழிவறை, பெண்கள் கழிவறை, மாற்றுத்திறனாளிகளுக்கான கழிவறைகள் அமைந்துள்ளது. இக்கல்லூரியில், சுமார் 1300 மாணவர்கள் கல்வி கற்கும் வகையில் வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



காரைக்குடி, அரசு சட்டக்கல்லூரியில் பயின்று வரும் மாணவன் சால்வின் அவர்கள் தெரிவிக்கையில், எனது பெயர் சால்வின். நான் காரைக்குடி, அரசு சட்டக்கல்லூரியில் மூன்றாம் ஆண்டு சட்டப்படிப்பு பயின்று வருகிறேன். நான் சட்டத்தில் உயர்கல்வி பயின்று, வழக்கறிஞர் பணியினை மேற்கொள்ள வேண்டும் என்ற இலட்சியத்துடன் எனது கல்வியை தொடர்ந்தேன். எனது குடும்பம் பொருளாதார ரீதியில் நடுத்தர நிலையில் தான் உள்ளது. எனது பெற்றோரின் அன்றாட வருமானத்தை கொண்டு, குடும்ப தேவைகள் மற்றும் எனது உடன் பிறந்தோரிகளின் படிப்பிற்கான தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. நான் எனது பள்ளிக்கல்வியினை சிறந்த மதிப்பெண்களுடன் நிறைவு செய்ததைத் தொடர்ந்து, சட்டக் கல்வி பயில்வதற்கென விண்ணப்பித்தேன். அந்தவகையில், கலந்தாய்வில் எனக்கு காரைக்குடி, அரசு சட்டக்கல்லூரியில் சட்டம் பயில்வதற்கான இடம் கிடைத்தது.

அச்சமயம், அரசு சட்டக் கல்லூரியானது தற்காலிக கட்டிடத்திலேயே இயங்கி வந்தது. பிற மாவட்டங்களிலிருந்து வருகை புரிந்து விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்கள் மிகுந்த அளவில் இருந்தனர். மாணாக்கர்களுக்கான விடுதிகளும் தற்காலிக கட்டிடத்திலேயே இயங்கி வந்தது. பிற சட்டக்கல்லூரிகளைப் போன்று அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளான நூலகம், ஆய்வகம், கலையரங்கம், விடுதி ஆகியவைகளுடன்சட்டக்கல்லூரி அமைந்திட வேண்டும் என்ற எண்ணம் அனைத்து மாணாக்கர்களிடமும் இருந்தது. எங்களது ஆசை மற்றும் கனவுகளை நிறைவேற்றுகின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காரைக்குடி, கழனிவாசல் பகுதியில் 19.15 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 100 கோடியே 45 இலட்சம் மதிப்பீட்டில் விடுதியுடன் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு சட்டக் கல்லூரி வளாகக் கட்டடத்தினை 31.1.2026 அன்று நேரில் வருகைப்புரிந்து திறந்து வைத்துள்ளார்கள்.

புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு சட்டக்கல்லூரி கட்டமானது, மாணாக்கர்களின் தேவைகள் மற்றும் எண்ணங்களை பிரதிபலிக்கின்ற வகையில் அமைந்துள்ளது. இப்புதிய கட்டிடத்தில், உணவு அறை, வகுப்பறைகள், நவீன நூலகம், படிப்பறை, புத்தக வைப்பு அறை, மொழி ஆய்வகம், உள்விளையாட்டு அரங்கம், கருத்தரங்கம், ஸ்மார்ட் வகுப்பறைகள், கணினி ஆய்வகம் போன்ற வசதிகள் மட்டுமன்றி, நீதிமன்ற மாதிரி கூடமும் அமையப் பெற்றுள்ளது. குறிப்பாக, நீதிமன்ற மாதிரி கூடத்தில் வழக்குகளை முறையிடும் பொழுது, பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை எங்களது பேராசிரியர்கள் செயல்முறையாக எடுத்துக் கூறும் பொழுது, நீதிமன்ற வழிமுறைகள் குறித்த அனுபவங்கள் எங்களுக்கு கிடைக்கப்பெறுகிறது. அதுமட்டுமன்றி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாணாக்கர்களும் உயர்கல்வியினை இடைநிற்றலின்றி பெற வேண்டும் என்ற நோக்கில், மாதம் ரூபாய் 1,000/- வழங்கும் புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் போன்ற திட்டங்களையும், தொழில்நுட்ப அறிவினையும் பெற வேண்டும் என்ற நோக்கில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் மடிக்கணினிகளையும் வழங்கி வருகிறார்கள். இவ்வாறாக, ஒரு மாணவரின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு, பெற்றோரின் நிலையிலிருந்து சிந்தித்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியும், புதிய அரசு கல்லூரிகளை திறந்து வைத்து, ஏழை எளிய மாணாக்கர்களின் உயர் கல்வி கனவு நிறைவேறுவதற்கு உறுதுணையாக இருந்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு காரைக்குடி, அரசு சட்டக்கல்லூரி மாணாக்கர்களின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என சட்டக்கல்லூரி மாணவன் சால்வின் அவர்கள் தெரிவித்தார்.





::தொகுப்பு::
மு.ராஜசெல்வன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை மாவட்டம்.

# கோவை மாநகர் மாவட்ட மகளிரணி சார்பில் இனிப்புகள் வழங்கப்பட்டது



கோவை. பிப்.14-

காந்திபுரம் கிராஸ்கட் சாலையில் மகளிரணி சார்பில் நடைபெற்ற நிகழ்வில், கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை செந்தமிழ்ச்செல்வன் மகளிருக்கு இனிப்புகள் வழங்கினார்.

இதில் மகளிரணி அமைப்பாளர் அன்னம்மாள்,மாவட்ட துணைச்செயலாளர்கள் கோட்டை அப்பாஸ்,கல்பனா,பொதுக்குழு உறுப்பினர் சரஸ்வதி,திமுக தகவல் தொழில்நுட்ப அணி துணைச்செயலாளர் டாக்டர் மகேந்திரன்,பகுதிக் கழக செயலாளர் சேதுராமன்,முன்னாள் மாநில மாணவரணி துணைச்செயலாளர் வழக்கறிஞர் கணேஷ்குமார்,மகளிர் தொண்டரணி அமைப்பாளர் கனிமொழி,மகளிரணி தலைவர் தீபா, துணை அமைப்பாளர்கள் கௌசி,லதா,ஜானகி,மரகதம்,கமலவேணி,கல்பனா,ஜீவா வழக்கறிஞர்,வாசுகி,ராதா,பிரின்ஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அதிமுக ஆர்ப்பாட்டம் பட்டாசு வெடித்து கொண்டாடிய கிருஷ்ணகிரி திமுக



கிருஷ்ணகிரி, பிப்ரவரி. 14-

கிருஷ்ணகிரியில் அதிமுக ஆர்ப்பாட்டம் நடக்கும் இடம் அருகே திமுகவினர் பட்டாசு வெடித்தும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.தமிழகத்தில் தேர்தல் நெருங்க உள்ள நிலையில் திமுக, அதிமுக கட்சிகள் பரபரப்பாக இயங்கி வருகின்றன. 125 நாள் வேலை திட்டத்தை மறைக்க நினைக்கும் திமுக அரசை கண்டித்து அதிமுக சார்பில் ஒன்றியங்கள் தோறும் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி இன்று காலை 10:30 மணி அளவில் கிருஷ்ணகிரி பிடிஓ அலுவலகம் முன்பு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற இருந்தது. அதே இடத்தில் தான் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக அலுவலகமும் உள்ளது. இந்நிலையில் தமிழகம் முழுவதும் 1.31 கோடி பெண்களுக்கு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மற்றும் கோடை சிறப்பு தொகுப்பு 2,000 ரூபாய் என மொத்தம் 5,000 ரூபாய் அறிவித்து காலை முதலே அனைவர் வங்கி கணக்கிலும் பணம் செலுத்தப்பட்டது.

இதனால் மகிழ்ச்சி வெள்ளத்தில் பெண்கள் மூழ்கினர். மகளிர் உரிமைத் தொகையை கொடுத்து விடாமல் தடுக்க மத்திய பாஜக அரசு செய்த சதியை திமுக வென்றுவிட்டது என தமிழக முதல்வர் கூறினார். இந்நிலையில், கிருஷ்ணகிரியில் அதிமுக ஆர்ப்பாட்டம் நடந்த இடத்தில் திமுகவினர் அதிக அளவில் குவிந்தனர். கிருஷ்ணகிரி திமுக கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம்எல்ஏ தலைமையில், அணி திரண்ட திமுகவினர், தமிழக முதல்வரை வாழ்த்தி கோஷங்களை எழுப்பியும் பட்டாசுகள் வெடித்தும் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். அதிமுக ஆர்ப்பாட்டக் களத்தை திமுக வாழ்த்து கூட்டமாக மாற்றி சென்றனர். இதனால் அதிமுக ஆர்ப்பாட்டம் சற்று தாமதமாக துவங்கியது.

# திருப்பூரில் வைகோ தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் இளைஞர் நற்பணி மன்றம் சார்பில் அமைக்கப்பட்ட மேல் மட்ட நிழல் கூரை திறப்பு விழா!



திருப்பூர், பிப்.14–

திருப்பூர் மாநகராட்சிக்கு உற்பட்ட 20 வார்டில் உள்ள மாரியம்மன் கோவில் அருகே நிழல் கூரை அமைத்து தரவேண்டும் என பொதுமக்களின் கோரிக்கை ஏற்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் செயலாளரும்,முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான வைக்கோ அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 13.75 லட்சம் ரூபாய் நிதி மாரியம்மன் கோவில் இளைஞர் நற்பணி மன்றம் சார்பில் 3.45 லட்சம் மதிப்பீட்டில் இணைந்து ரூபாய் 17=25 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மேல் கூரை திறப்பு விழா நடைபெற்றது மதிமுக பகுதி செயலாளரும் கவுன்சிலருமான குமார் தலைமையில் நடைபெற்றது. மேற்கூறையினை மாநகராட்சியின் மேயர். தினேஷ்குமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து மேற்குரையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டினை திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளரும், 24 ஆவது மாமன்ற உறுப்பினருமான. அரிமா ஆர் நாகராஜ் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர். பாலசுப்ரமணியம். 2 வது மண்டல தலைவர் தம்பி ஆர்கோவிந்தராஜ். துணை ஆணையர் சுந்தர்ராஜன். உதவி செயற்பொறியாளர் ஹரி. இளநிலை பொறியாளர் சுஜாத் அலி. மாநகராட்சி ஒப்பந்ததாரர் எஸ் ஆர் பி ராஜாராம் மற்றும் ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் திருக்கோவில் நிர்வாகிகள் செட்டி மை செல்வராஜ் செட்டியார்.பெரியதனம் வெங்கடேஷ் செட்டியார். தர்மகர்த்தா பழனிச்சாமி செட்டியார். ஆலோசகர் முன்னாள் கவுன்சிலர் கந்தசாமி. சுந்தரமூர்த்தி. அறங்காவலர் ஆறுமுகம் ரேவதி சந்திரன. இளங்கோ. முன்னாள் அறங்காவலர் பூபாலன். மண்டப கமிட்டி தலைவர் எஸ்.பி.சிவக்குமார் செயலாளர் எ.சிவக்குமார் திருமண தகவல் மைய அறக்கட்டளை தலைவர் கருப்புசாமி செயலாளார் கார்த்திகேயன் பொருளாளர் ஜெய் ஸ்ரீ பாபு நிதி குழு தலைவர் சண்முகம். பொருளாளர் ஆனந்த முருகன். அனைத்திந்திய தேவாங்கர் ஸ்ரீ சௌடேஸ்வரி நற்பணி மன்ற மாநில பொருளாளர் வீரபத்திரன் உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகளும் ஊர் பொதுமக்களும் பங்கேற்றனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம் பாம்பாறு நீர்த்தேக்கத்திலிருந்து விவசாய பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று பாசனத்திற்காக 4,000 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் 13.02.2026 முதல் 120 நாட்களுக்கான தண்ணீரை பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் .தே. மதியழகன், மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள் ஆகியோர் பிறந்து வைத்தனர். உடன், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் .பார்த்தீபன், வட்டாட்சியர் .ராஜலட்சுமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.




# மருதவல்லிபாளையத்தில் எருது விடும் திருவிழா



வேலூர், பிப்.14-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம் மருதவல்லிபாளையம் ஊராட்சியில் மாபெரும் எருது விடும் திருவிழா பிப் 13 அன்று நடைபெற்றது. வேலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுமார் 250க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன. இளைஞர்கள் ஏராளமானோர் எருது விடும் திருவிழாவை காணக் குவிந்திருந்தனர்.

குறைந்த நேரத்தில் குறிப்பிட்ட இலக்கினை கடக்கும் காளைகளுக்கு முதல் பரிசாக ஒரு லட்சம், இரண்டாம் பரிசாக எண்பதாயிரம், மூன்றாம் பரிசாக அறுபதாயிரம் பரிசுத்தொகை உள்ளிட்ட மொத்தம் 50 பரிசுகள் வழங்கப்பட்டன.

போட்டியில் கலந்து கொண்ட அனைத்து காளைகளையும் கால்நடை மருத்துவர்கள் பரிசோதனை செய்த பிறகு அனுமதிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் எருது விடும் குழு ஊராட்சி மன்ற தலைவர் எம்.எஸ்.பாபுஜி, துணைத்தலைவர் கார்த்திக் மற்றும் இளைஞர் அணியினர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

# நாகர்கோவிலில் பணத்தகராறில் பயங்கரம் : கட்டிட காண்டிராக்டர் கார் ஏற்றி கொலை



நாகர்கோவில், பிப். 14-

நாகர்கோவிலில் அடுத்த தெங்கம் புதுர் பகுதியை சேர்ந்தவர் ஜெயக்குமார் (49). மணல், ஜல்லி வியாபாரம் செய்து வருகிறார். இவருக்கும் கன்னியாகுமரி அடுத்த தெற்கு கரும்பாட்டூர் ஒரு பகுதி சேர்ந்த விக்டர் ராஜதாஸ் என்பவருக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்துள்ளது. அந்த வகையில் ஜெயக்குமாருக்கு விக்டர் ராஜதாஸ் ரூ 1லட்சத்து 2 ஆயிரம் கொடுக்க இருந்துள்ளது. ஆனால் இந்த பணத்தை கொடுக்காமல் அவர் இழுத்தடிப்பு செய்து வந்துள்ளார். இதனால் ஜெயக்குமாருக்கும் விக்டர் ராஜதாசுக்கும் பிரச்சனை இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு நாகர்கோவில் செட்டிகுளம் பகுதியில் உள்ள விட்டார் ராஜதாசின் எலக்ட்ரானிக் கடைக்கு சென்று ஜெயக்குமார் தனக்கு தரவேண்டிய பணத்தை கேட்டுள்ளார். அப்போது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக ஜெயக்குமார் தனது சகோதரர் விஜயகுமாருக்கு போன் செய்து தகவல் தெரிவித்துள்ளார். சிறிது நேரத்தில் விஜயகுமார் அங்கு வந்துள்ளார். விக்டர் ராஜதாஸிடம் தனது சகோதரருக்கு கொடுக்க வேண்டிய பணத்தைக் கேட்டு தகராறு செய்துள்ளார். அப்போது திடீரென காரில் ஏறிய விக்டர் ராஜதாஸ் வேகமாக கார் எடுத்து ஜெயக்குமார், விஜயகுமாரை இடித்து தள்ளிவிட்டு சென்றுள்ளார். கார் மோதியதில் விஜயகுமார் கீழே விழுந்து கீழே விழுந்து படுகாயம் அடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ஜெயக்குமாரும் காயம் அடைந்தார். ஆனால் விக்டர் ராஜதாஸ் காரை நிறுத்தாமல் தப்பி சென்று விட்டார். இந்த சம்பவம் குறித்த புகாரின் பேரில் கோட்டார் போலீசார் விஜயகுமார் உடலை கைப்பற்றி குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஜெயக்குமார் அளித்த புகாரின் பேரில் கொலை உள்ளிட்ட பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து விக்டர் ராஜதாசை போலீசார் தேடி வருகிறார்கள்.



மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையை ஆந்திரா மாநிலத்தை போன்று உயர்த்தி வழங்க வலியுறுத்தி இராஜாக்கமங்கலம் ஒன்றியம் மேலகிருஷ்ணன் புதூர் சந்திப்பில் மறியல் போராட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் மிக்கேல் நாயகி தலைமை தாங்கினார். மாவட்டக்குழு உறுப்பினர் அருள் தொடக்கி வைத்து பேசினார். ஒன்றிய தலைவர் சாந்தி, எடிசன், கண்ணன், சுப்பிரமணியன், லேன்சி, இசக்கியம்மாள், விஜயா உட்பட பலர் கலந்து கொண்டனர். அனைவரும் கைது செய்யப்பட்டு அருகே இருந்த தனியார் திருமண மண்டபத்தில் வைத்தனர் பின்பு அவர்களை அனுப்பினர்

# கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்



திருப்புவனம், பிப்.14-

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டத்திற்குட்பட்ட கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.திறந்தவெளி அருங்காட்சியக திறப்பு விழா நிகழ்ச்சியில், நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம்தென்னரசு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் ஆகியோர், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி ஆகியோர் முன்னிலையில் பங்கேற்று சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் போது, அமைச்சர் பெருமக்கள் தெரிவிக்கையில்,தமிழ்நாடு 15 இலட்சம் ஆண்டுகள் மனிதகுல வரலாற்றுத் தொன்மை கொண்ட நிலப்பரப்பாகும். தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வுகளின் அறிவியல் அடிப்படையிலான பகுப்பாய்வு முடிவுகள் மூலம் தமிழ்நாட்டின் வரலாற்றில் புதிய வெளிச்சம் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில், கீழடி அகழாய்வு, தொல்லியலாளர்கள் இடையே மட்டுமின்றி உலகத் தமிழர்கள் இடையேயும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்ச் சமூகமானது, கி.மு. ஆறாம் நூற்றாண்டில் படிப்பறிவும் எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக விளங்கியதை கரிமப் பகுப்பாய்வுகளின் முடிவுகள் வாயிலாக உறுதியாக நிலைநிறுத்தியுள்ளது.

குறிப்பாக, சிந்து சமவெளி நாகரிகக் காலக்கட்டத்தில் தமிழர்கள் பண்பாடு கலாச்சாரத்துடன், வாழ்ந்ததற்கான அடையாளம் இந்த ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டு, உலக வரலாற்றில் தமிழர்கள் 2,600 ஆண்டுகளுக்கு முன்பு பண்பாடு, கலாச்சாரத்துடன் வாழ்ந்த பெருமை தமிழர்களுக்கு முழுமையாக இருந்ததாக போற்றப்பட்டு வருகின்றன.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புகள் உலக நாடுகள் அளவில் பேசப்படும் அளவிற்கு பண்டையக்காலத்தில் தமிழர்கள் வாழ்ந்த வரலாற்றுச் சிறப்புகள் கண்டறியப்பட்டுள்ளது. இதில், பண்டையகாலத்திலேயே வாழ்ந்த முன்னோர்கள் நவநாகரிக ஆபரணங்கள் பயன்படுத்தியது, எழுத்துச் சுவடிகள், தற்காப்புக்காக பயன்படுத்தும் ஆயுதங்கள், கட்டுமானப் பொருட்கள் என பலதரப்பட்ட பொருட்கள் இதுவரை நடந்த ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்மூலம், பண்டையக்கால மக்களின் நகரநாகரிக கலாச்சாரத்தை தெரிந்து கொள்வது மட்டுமன்றி, அதனைப் பாதுகாப்பதும் தங்கள் கடமை என உணர்ந்து, தமிழகத்தில் தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புக்கள் கிடைக்கும் இடங்களைக் கண்டறிந்து, ஆராய்ச்சிப் பணிகளை செயல்படுத்தி, முன்னோர்களின் கலாச்சாரத்தையும், பண்பையும், எதிர்கா இளம் தலைமுறையினரும் தெரிந்து கொள்ளும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு, கலாச்சாரங்களையும், தமிழர்களையும் போற்றி பாதுகாக்கும் முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்ந்து வருகிறார்கள்.

பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் தொன்மை, பண்பாடு, தொழில்நுட்பம் மற்றும் விழுமியங்களுக்குப் பெருமை சேர்க்கும் வண்யணம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் சார்பில் பல்வேறு இடங்களில் அகழாய்வு பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

அதில், கீழடி, மணலூர், கொந்தகை, அகரம் ஆகியப்பகுதிகளில் தொல்லியியல் துறையின் மூலம் 10 கட்டங்களாக அகழாய்வு ஆராய்ச்சிப் பணிகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.தமிழர்களின் நாகரிக தொன்மை மற்றும் பழமையினை அகழாய்வுகளின் மூலம் உலகளவில் அறியச் செய்துள்ள கீழடிக்கு மேலும் சிறப்பு சேர்க்கின்ற வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 23.01.2025 அன்று, கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைப்பதற்கென ரூ.24.30 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டப்பட்டு, கீழடி திறந்தவெளி அருங்காட்சியக பணிகள் சிறப்பாக நிறைவு பெற்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது வரலாற்று சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

கீழடி திறந்தவெளி அருங்காட்சியகமானது, சுமார் 4.5 ஏக்கர் பரப்பளவில், 65,380 சதுர அடி அளவில் இரண்டு பிரம்மாண்ட காட்சிக்கூடங்களுடன் உலகத்தரம் வாய்ந்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளதுஇதுபோன்று பண்டையகால தமிழர்களின் பெருமையை உலகளவில் பறைசாற்றுகின்ற வகையிலும், அதனை போற்றுகின்ற வகையிலும், தமிழர்களின் வாழ்வியல் நாகரிகத்தினை எதிர்கால சந்ததியினர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சிறப்பான நடவடிக்கைகள் தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அமைச்சர்கள் தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெ.ஃபி கிரேசியா, தொல்லியல் அலுவலர்கள் , ரமேஷ் மற்றும் அஜய்குமார், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் ஆல்வின், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், மானாமதுரை நகர்மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, திருப்புவனம் வட்டாட்சியர் ஆனந்த பூபாலன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## 125 நாள் வேலை உறுதித் திட்டத்தை சீர்குலைக்க முயலும்

# தமிழக அரசை கண்டித்து அதிமுக கண்டன ஆர்ப்பாட்டம் என்.தளவாய்சுந்தரம், எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார் !



நாகர்கோவில், பிப்.14-

குமரி கிழக்கு மாவட்ட அ.இ.அ.தி.மு.க சார்பில் தோவாளை, அகஸ்தீஸ்வரம், இராஜாக்கமங்கலம், குருந்தன்கோடு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களின் முன்பாக கிராம மக்களின் 125 நாள் வேலை உறுதித் திட்டத்தை சீர்குலைக்க முயலும் தமிழக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று பூதப்பாண்டியில் உள்ள தோவாளை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு முன்பாக நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தை முன்னாள் அமைச்சரும், குமரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான என்.தளவாய்சுந்தரம் எம்எல்ஏ தொடங்கி வைத்து அவர் பேசியதாவது:-

2021 சட்டமன்ற பொதுத்தேர்தலின் போது தி.மு.க தேர்தல் அறிக்கையில் 42-வது வாக்குறுதியான 100 நாட்கள் வேலை வாய்ப்புத் திட்டத்தை 150 நாட்களாக உயர்த்துவோம் என்றும், பணியாளர்களின் சம்பளம் 300 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும், மேலும் 100 நாள் வேலை திட்டம் பேரூராட்சிகளுக்கும் விரிவு படுத்தப்படும் என்று சொல்லி வாக்குறுதியாக அளித்து ஆட்சிக்கு வந்தனர். . வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாரதப்பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கொண்டு வந்த 100 நாள் வேலை திட்டம் 125 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனை சீர்குலைக்க தி.மு.க அரசு முயற்சிக்கிறது. இதனைக் கண்டித்து தான் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகிறது.

தற்போதும் வருகின்ற தேர்தலை முன்னிட்டு பல்வேறு பொய்யான வாக்குறுதிகளை அளிப்பார்கள். இனிமேலும் மக்கள் விடியா தி.மு.க ஆட்சியின் வாக்குறுதிகளை நம்பத் தயாராக இல்லை. தி.மு.க ஆட்சியை வருகின்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் மக்கள் வாக்குகள் மூலம் அகற்று வார்கள். மீண்டும் புரட்சித்தமிழர் எடப்பாடியார் தலைமையிலான அ.இ.இ.தி.மு.க-வின் பொற்கால ஆட்சி மக்களின் பேராதரவுடன் அமையும் என அவர் பேசினார்/ கழக அமைப்புச் செயலாளர் நாஞ்சில் வின்செண்ட், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாஞ்சில் முருகேசன், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் சந்துரு மற்றும் நிர்வாகிகளும், விஷ்வஹிந்து பரிசத் சார்பில் காளியப்பன் மற்றும் நிர்வாகிகளும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாநகர கவுன்சிலர் றி.ஆர்.செல்வம் மற்றும் நிர்வாகிகளும், அம்மா மக்கள் முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர் ராகவன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மணிகண்டன் மற்றும் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.